27725

AL/2023(2024)/72/T-I

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **இரு** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **மூன்று** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.

## பகுதி I

**1.** மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) பூவொடு புரையுங் கண்ணும் வேயென
விறல்வனப் பெய்திய தோளும் பிறையென
மதிமயக் குறூஉம் நுதலும் நன்றும்
நல்லமன் வாழி தோழி யல்கலும்
தயங்குதிரை பொருத தாழை வெண்பூக்
குருகென மலரும் பெருந்துறை
விரிநீர்ச் சேர்ப்பனொடு நகாஅ வூங்கே.

(i) தலைவனது பிரிவால் தனக்கு உண்டாகிய வருத்தத்தை தலைவி எவ்வாறு எடுத்துரைக்கிறாள்?

(ii) முன்பு தன்னிடம் விளங்கிய உடற்பொலிவை விவரிப்பதற்கு தலைவி கையாண்ட உவமைகளை இனங்கண்டு விளக்குக.

(iii) தனது எதிர்கால வாழ்வு பற்றிய ஏக்கத்தை தலைவி உள்ளுறையுவமையூடாக உணர்த்துமாற்றினை விளக்குக.

(ஆ) கேட்டனன் கிராதர்வேந்தன்
கிளர்ந்தெழும் உயிர்ப்பனாகி
மீட்டுமண் ணதனில் வீழ்ந்தான்
விம்மினன் உவகை பொங்கத்
தீட்டரு மேனி மைந்தன்
சேவடிக் கமலப் பூவில்
பூட்டிய கையன் பொய்யில்
உள்ளத்தான் புகல லுற்றான்

(i) இச்செய்யுளில் விவரிக்கப்பெறும் சந்தர்ப்பம் யாது?

(ii) பரதனது பெருங்குணத்தை உணர்ந்துகொண்ட குகனது உணர்ச்சிப்பெருக்கு எவ்வாறு வெளிப்படுகின்றது?

(iii) இச்செய்யுளில் பரதனின் அழகை விவரிக்கும் தொடரினை இனங்கண்டு, அதில் நீர்காணும் நயங்களை விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

**2.** (அ) பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

தேவரெல்லாங் கொலுவிருக்கும் ஈழமெங்கள் தேயஞ்
செப்பிடுவே னதன் பெருமை சற்றிருந்து கேளும்
மூவரன்று பாடுதிருக் கோணமலை நாட்டில்
முத்தொதுக்கிக் கத்துகடல் சூழுமெங்கள் தேயம்.

எத்திசையும் போற்றுங்கதிர் காமமலை நாட்டில்
எங்கள் வள்ளி குடியிருக்கும் ஈழமெங்கள் தேயம்
புத்தபிரான் பொன்னடியாம் பொற்கமல பீடம்
பொலியுமலை எங்கள் மலை ஈழமெங்கள் தேயம். (தேவர்)

மகாவலிகங் கைப்புனலாந் தாவணியை வீசி
மாதிரமெல் லாம்மணக்கும் வாசனையைப் பூசி
காவலரின் கண் மருட்டுங் கன்னி எங்கள் தேயம்
காசினியி லிவளைப்போற் கன்னியில்லை யில்லை. (தேவர்)

செந்தமிழுஞ் சிங்களமு மாயவிரு தோழி
சேவைசெய்யும் இராசகன்னி ஈழமெங்கள் தேயம்
இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை
வந்தனையல் லாதெமக்குச் சிந்தனை வேறில்லை. (தேவர்)

(i) ஈழநாட்டின் சமயரீதியிலான சிறப்பு இக்கவிதையில் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது?

(ii) ஈழநாட்டைக் கவிஞர் எவ்வாறு உருவகிக்கிறார்? அந்த உருவகம் எவ்வகையில் விவரிக்கப்படுகிறது?

(iii) மொழிவாரியான சமத்துவம் ஈழநாட்டில் நிலவுகிறது என்ற கருத்தினை கவிஞர் உணர்த்தும் பாங்கினைத் தெளிவுபடுத்துக.

(iv) 'இந்தியரெம் அக்கைமக்கள் என்றணைக்கும் அம்மை' என்ற தொடர்மூலம் கவிஞர் நுட்பமான முறையில் வலியுறுத்தும் விடயங்கள் யாவை?

**அல்லது**

(ஆ) அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடிமுள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக்கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக்கருமத்தை முடித்து, அடிக்கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ்செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண்சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலக்கை விரல்களுக்குள் எடுத்து 'சிவ... சிவ....' என்று உச்சரிக்கும்பொழுது, நல்லூர்க்கந்தனின் உதயகாலப் பூசைமணி கேட்கும்.

இன்றும் 'சிவ... சிவ....' என்று விபூதி பூசும்பொழுது, உதயகாலப் பூசைமணி கேட்கின்றது. காலவோட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்தியகருமங்கள்.

இன்று வருடப்பிறப்பு. முதன் முதலில் இந்த எண்ணந்தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப்பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்துவிட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள்

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



வந்த வருடப்பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு; தகப்பனுக்கு தலைக்கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு; இப்படிப் பல. கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது.

முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணையில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக்கிழங்கைச் சுட்டுப் பச்சை மிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப்பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள்.

(i) முகத்தாரின் காலந்தவறாத் தன்மை விவரிக்கப்படுமாற்றினை விளக்குக.

(ii) அவரின் இளமைக்கால உடல் வலிமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது?

(iii) தன் மனைவிமேல் முகத்தார் கொண்டிருந்த பாசம் வெளிப்படும் தொடர் யாது? அதிற் காணத்தக்க நயம் யாது?

(iv) இவ்வுரைப்பகுதியில் குறிப்பிடப்பெறும் நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள் எவை?

(4 × 4 = 16 புள்ளிகள்)

## பகுதி II

3. **இடன் அறிதல்** என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) பகைவரை வெல்லக் கருதிய அரசர், பகைநாட்டு அரணின் புறத்தே அதற்கேற்ற இடத்தை அறிதல்

(ஆ) பகைவருடன் போர் செய்வதற்கான இடத்தை அறிதல்

(இ) பகைவருடன் போர் செய்யக்கூடாத இடமும் அவ்விடத்திலே போர் செய்யின் ஏற்படும் பாதிப்பும்

(ஈ) இவ்வதிகாரத்திலே பயின்றுவரும் அணிகளின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

4. **கம்பராமாயணத்திலே,** கங்கைக் கரைக்குப் பெருஞ்சேனையுடன் பரதன் வந்தது முதலாக, குகன் தனது படையைக் கூட்டியது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விவரிக்குக.

(அ) பரதனுடன் வந்த சேனை பற்றிய வருணனை

(ஆ) குகனது தோற்றமும் சீற்றமும்

(இ) தன் படைகளுக்குக் குகன் இட்ட கட்டளைகள்

(ஈ) கையாளப்பட்டுள்ள உவமை, உருவக அணிகளின் பொருத்தப்பாடு

(20 புள்ளிகள்)

5. ஒரு **வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது** என்ற நாவலில்,

(அ) தாமோதரம் என்ற பாத்திரத்தின் இலட்சியமும் அதை அடைவதில் அவன் காட்டிய தீவிரமும்

(ஆ) பெண்கள் கற்க வேண்டும் என்பதில் தாமோதரம் கொண்ட அக்கறை

(இ) தாமோதரத்தின் காதலும் அது தொடர்பில் அவனிடம் காணப்பட்ட கட்டுப்பாடும்

வெளிப்படுமாற்றினை விளக்குக. (20 புள்ளிகள்)

6. ந. பிச்சமூர்த்தியின் **நெருக்கடி** என்ற சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

(அ) பங்களாக்காரரின் குணவியல்பு

(ஆ) சூழலை விபரிப்பதில் ஆசிரியர் காட்டும் திறம்

(இ) 'நெருக்கடி' என்ற தலைப்பின் பொருத்தப்பாடு

ஆகியவற்றை விளக்குக. (20 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

**7.** கவிஞர் அபூபக்கரின் **எல்லாம் உமதே** என்ற கவிதையில்,

(அ) உழைப்பாளிகளின் அவலம்

(ஆ) அவர்களைச் சுரண்டும் செல்வந்தர்கள் மீதான கவிஞரின் சீற்றம்

(இ) சுரண்டுவோர்க்கு எதிராக உழைப்பாளிகளை அணி திரட்டுவதில் கவிஞர் காட்டும் தீவிரம்

என்பன புலப்படுமாற்றினைத் தெளிவுபடுத்துக. (20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **கோயில் திருப்பதிகத்தில்** மாணிக்கவாசகரின் பக்தி உணர்ச்சி வெளிப்படுமாறு

(ஆ) இராமாயணத்தோடு தொடர்புடையனவாய் இலங்கையில் நிலவும் ஐதீகங்கள் **இலங்கை ஆற்றுப்படையில்** பயன்படுத்தப்படுமாறு

(இ) அணிகளைக் கையாள்வதில் சாத்தனாருக்குள்ள திறம் **மணிமேகலை** பாடப்பகுதியில் வெளிப்படுமாறு

(ஈ) **தேம்பாவணி** காட்சிப் படலத்தில் யேசுபாலனின் சிறப்புகள் வெளிப்படுமாறு

(உ) **இருதுயரங்கள்** நாடகத்தில் விவரிக்கப்பட்டுள்ள அரங்க நெறியாள்கை உத்திகள்

(20 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

27725



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

| | |
|---|---|
| දෙමළ | II |
| தமிழ் | II |
| Tamil | II |

**72 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடம் |
| Additional Reading Time | - | 10 minutes |

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.

※ பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் கூட்டுயிர்
(1) ஏ (2) ஔ (3) ஓ (4) ஊ (5) ஆ (……)

1.2 பின்வருவனவற்றுள் வளைநா வெடிப்பொலி
(1) ம் (2) த் (3) ற் (4) ட் (5) ச் (……)

1.3 உடனிலையாக **மயங்காத** எழுத்து
(1) ற் (2) ந் (3) ன் (4) ழ் (5) ங் (……)

1.4 பின்வருவனவற்றுள் பகுபதம்
(1) மாடு (2) கதிரை (3) அரசி
(4) வேலை (5) மந்தை (……)

1.5 கூட்டுப்பகுதி இடம்பெற்ற சொல்
(1) வருகிறான் (2) வந்தது (3) சிந்தித்தான்
(4) கைவிட்டான் (5) வேர்க்கிறது (……)

[பக். 2 ஐப் பார்க்க

1.6 சாரியை இடம்பெற்ற சொல்
(1) ஓடினான் (2) படிக்கின்றான் (3) வந்தனன்
(4) பாடுவான் (5) நடந்தான் (……)

1.7 நிலைமொழி ஈற்று உயிர்முன், வருமொழி முதல் வல்லினம் இரட்டித்துப் புணர்ந்தது
(1) தாய்ப்பால் (2) பலாச்சுளை (3) மனச்சுமை
(4) மரக்கிளை (5) வட்டக்கல் (……)

1.8 'தாங்கள் அவசியம் எங்கள் வீட்டுக்கு வருகைதர வேண்டும்.' - இந்த வாக்கியத்தில் இடம்பெறும் 'தாங்கள்' என்ற சொல்
(1) படர்க்கைத் தற்சுட்டுப் பெயர்
(2) மாற்றுப் பெயர்
(3) மரியாதை முன்னிலைப் பெயர்
(4) உயர்திணைப் பன்மைப் பெயர்
(5) மரியாதை ஒருமைப் பெயர் (……)

1.9 வினைச்சொல்லில் இடம்பெற்ற குற்றெழுத்து நெடிலாவதன் மூலம் உண்டான ஆக்கப்பெயர்
(1) பாட்டு (2) தோல்வி (3) நாட்டம்
(4) நாற்றம் (5) பேறு (……)

1.10 பின்வருவனவற்றுள் உம்மைத்தொகை
(1) வீட்டுவாசல் (2) வீடுவளவு (3) வீட்டுத்தோட்டம்
(4) வீட்டுவிலங்கு (5) வீடுபேறு (……)

1.11 பின்வருவனவற்றுள் மரியாதை ஒருமைப் பெயர்
(1) தாயார் (2) தந்தையர் (3) மாமன்மார்
(4) பிள்ளைகள் (5) முதியோர் (……)

1.12 'இல்' உருபு ஏதுப் பொருளில் இடம்பெற்ற தொடர்
(1) நாட்டில் நிறைந்துள்ள வளம்
(2) மரத்தில் படர்ந்துள்ள கொடி
(3) மகிழ்ச்சியில் நிறைந்த மனது
(4) மாரிகாலத்தில் பொழியும் மழை
(5) கூட்டில் அடைபட்ட குருவி (……)

1.13 சாரியை ஏற்றுவந்த உடைமை வேற்றுமைத் தொடர்
(1) வீட்டுக் கூரை
(2) எனது நண்பன்
(3) அவனுடைய பணம்
(4) உழைப்பாளிகளது உரிமை
(5) காற்றினது சீற்றம் (……)

1.14 'இன்' என்னும் இடைநிலை பெற்ற வினைமுற்று
(1) ஓடினான் (2) வருகின்றது (3) போகின்றான்
(4) வாடுகின்றன (5) உறங்கியது (……)

1.15 பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்று
(1) வாரும் (2) வாருங்கள் (3) வரட்டும்
(4) வராதே (5) வரும் (……)



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



1.16 செயப்படுபொருள் குன்றிய வினை
(1) எரித்தான் (2) விடிந்தது (3) தறித்தேன்
(4) வைத்தான் (5) அடைந்தது (……)

1.17 'வை' என்பது முதல் வினையாக இடம்பெற்ற வாக்கியம்
(1) விளக்கை ஏற்றி மேசையில் வைத்துவிட்டான்
(2) மங்கல விளக்கை ஏற்றிவைத்தார்
(3) பணத்தைப் பதுக்கிவைத்தார்
(4) இப்படி ஆகும் என்று அன்றைக்கே சொல்லிவைத்தேன்
(5) வேண்டிய பணத்தை இப்போதே எடுத்துவை (……)

1.18 இடம் உணர்த்தும் வினையடை இடம்பெற்ற வாக்கியம்
(1) மாணவர்கள் எல்லோரும் சுற்றுலாச் சென்றனர்
(2) எல்லோரும் இங்கே வந்து அமருங்கள்
(3) இனிமேல் நீங்கள் அடிக்கடி வருவீர்கள்
(4) வாகனங்கள் தாறுமாறாகத் திரிகின்றன
(5) வானம் கன்னங்கரேல் என்று இருண்டது (……)

1.19 பின்வருவனவற்றுள் தொழிற்பெயர்த் தொடர் இடம்பெற்ற வாக்கியம்
(1) இராமன் வந்துவிடுவான் என்று பரதன் காத்திருந்தான்.
(2) குகன் தன் படைகளை ஆயத்தம் செய்துவிட்டு பரதனைக் காண வந்தான்.
(3) கைகேயி இப்படி நடந்துகொள்வாள் என்று தசரதன் நினைத்திருக்கவில்லை.
(4) பரதன், நாட்டில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது.
(5) தாடகை வேகமாக வருவதை இராமன் கண்டான். (……)

1.20 எண்ணிக்கையை வெளிப்படுத்தும் முறையில் **பொருத்தமின்மை** காணப்படும் வாக்கியம்
(1) ஏறக்குறைய 30 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.
(2) தோராயமாக 35 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.
(3) இருபது, முப்பது பேர் அளவில் கூட்டத்துக்கு வந்தனர்.
(4) அண்ணளவாக 21 பேர் கூட்டத்துக்கு வந்தனர்.
(5) சுமார் 40 பேர் கூட்டத்துக்கு வந்தனர். (……)

(20 புள்ளிகள்)

* *

[பக். 4 ஐப் பார்க்க

27725



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023 (2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **2**ஆம், **3**ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

நாள்தோறும் நிகழ்வனவற்றைக் குறித்துவைத்தல் நாட்குறிப்பு எனப்படும். ஆங்கிலத்தில் 'டைரி' (Diary) என்பர். இக்காலத்தில் நாட்குறிப்பு, பெரும்பயனுடையதெனக் கருதப்பட்டுப் பலராலும் போற்றப்பட்டு வருகின்றது.

வணிகர், அரசியலாளர், ஆராய்ச்சியாளர் இவர்கட்கு இது மிகமிக இன்றியமையாதது. வணிகர் தாம் நாடோறும் அறியும் வணிகக் குறிப்புக்களைக் குறித்துக் கொள்வர். அரசியலாளர் நாட்டு நிகழ்ச்சிகளைக் குறித்து வைத்துக் கொள்வர். ஆராய்ச்சியாளர் தாம் கண்ட மாறுதல்களையும் புதுமைகளையும் குறித்துவைப்பர். ஏனையோர்க்கும் இங்ஙனம் இன்றியமையாப் பலவற்றையும் குறித்துவைக்க நாட்குறிப்பு மிகப் பயனுடையதாகும். அறிஞர் தத்தம் எண்ணங்களையும் அனுபவங்களையும் குறித்தல் உண்டு. எவ்வகையிலேனும் மறந்துவிடக் கூடியவற்றை மறவாமல் போற்றும்பொருட்டு இது மிக இன்றியமையாததாகின்றது. இங்ஙனம் குறித்து வைக்காது விடின், ஒருவர் தாம் காண்பன, கேட்பன, அறிவன எல்லாவற்றையும் மறவாதிருத்தல் கூடுமோ?

நாட்குறிப்பின் பயன் மிகப் பெரிது. அது வணிகர்க்கு மிகுந்த ஊதியம் பெற்றுத்தரும்; அரசியலாளரைச் செய்வன திருந்தச் செய்யுமாறு காக்கும்; ஆராய்ச்சியாளரை மேன்மேலும் விடாமுயற்சி செய்யுமாறு தூண்டும்; நல்லறிஞர் தூய வாழ்க்கை நடாத்துமாறு துணைசெய்யும்; தம்முடைய எண்ணங்களிலும் செயல்களிலும் நல்லன, தீயன அனைத்தும் குறித்து வைத்திருப்பவரை, மேலும் தீயன எண்ணாவாறு தடுத்து, நல்லன பெருக்குமாறு ஊக்கும். இங்ஙனம், நல்லாசிரியர்போன்று நாடோறும் உடனிருந்து காத்தலினால், ஆனந்தரங்கம்பிள்ளை, பாரதியார் போன்ற பெரியோரும் நாட்குறிப்பு எழுதும் வழக்கத்தைக் கடமையாகக் கொண்டனர்.

(13 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

தமிழ் இலக்கியப் போக்கை நோக்கின், அது ஆரம்ப காலத்தில் உலகியற் பண்பு மிக்கதாகவும், பின்பு சமயப் பண்பு மேலோங்கப் பெற்றதாகவும், அண்மைக் காலத்திலே இருவகைப் பண்புகளும் முரண்பட்டு நிற்கும் தன்மையையுடையதாகவும் இருப்பதைக் காணலாம். சேர சோழ பாண்டியராம் மூவேந்தர் ஆட்சி செலுத்திய காலப்பிரிவிலே எழுந்த இலக்கியப் படைப்புகள் பெரும்பாலும் சமயச்சார்பற்றனவாய் விளங்குகின்றன. பரிபாடல் என்னும் தொகை நூலிற் சமய நோக்கும் உலகியலும் இணைந்த பண்பினையுடைய பாடல்கள் காணப்படுவதை நாம் அறியமுடிகின்றது. ஆற்றுப்படையினைத் திசைதிருப்பும் படைப்பாகத் திருமுருகாற்றுப்படை விளங்குகின்றது. இதனைத் தொடர்ந்து சமயப் பண்பு தமிழ் இலக்கியத்தில் மேலோங்குகின்றது. சமயவுண்மைகளை இலக்கணத்திலிடம்பெறும் நூற்பாக்கள் போலக் கூறும் தன்மையையும் அதனைப் பக்தியின் அடிப்படையில் உணர்ச்சியூட்டிக்கூறும் பண்பையும் நாம் காணலாம். பக்தியிலக்கியத்தைப் பேணிப் பேரிலக்கியங்கள் கதைகூற முற்பட்டன. பேரிலக்கியத்தின் ஒடுக்கத்திலேயே தலபுராணங்களும் தல சம்பந்தமான பிரபந்தங்களும் பெருகின. பிரபந்தவகைகளின் பெருக்கத்திலே உலகியற் பண்பு இடம்பெற்றபோதும் இருபதாம் நூற்றாண்டின் விடியலிலேயே அது மீண்டும் தன்னிலை அடைந்தது.

(i) தமிழ் இலக்கியம் சமயச் சார்பற்று விளங்கிய காலப்பகுதி எது?

(ii) உலகியலும் சமய நோக்கும் இணைந்து காணப்படுவதாக இங்கு குறிப்பிடப்படும் நூல் எது?

(iii) தமிழ் இலக்கியத்தில் சமயப்பண்பு மேலோங்குவதற்கு அடிப்படையாக அமைந்த நூல் யாது?

(iv) சமய நூல்கள் உண்மைகளை எவ்வெவ் வகையில் எடுத்துக்கூறுகின்றன?

(v) தலங்கள் சம்பந்தமான நூல்கள் எத்தகைய சூழ்நிலையில் அதிகளவில் தோன்றின?

(vi) 'அது மீண்டும் தன்னிலை அடைந்தது' என்பதன்மூலம் உணர்த்தப்படுவது யாது?

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) விண்ணை நோக்கிய மனிதனின் பயணங்கள்

(ஆ) நாட்டின் அபிவிருத்தியில் நமக்கான பங்கு

(இ) இலக்கியமும் சமூக ஈடேற்றமும்

(ஈ) தமிழ் நாட்டாரியலுக்கு பேராசிரியர் சு. வித்தியானந்தனின் பங்களிப்பு

(உ) 'வரப்புயர...'

(25 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (அ) எட்டுத்தொகையில் இடம்பெறும் அகத்திணை நூல்கள் பற்றி, சுருக்கமாகக் கருத்துரைக்குக.

(ஆ) சங்க அகத்திணை மரபில் இடம்பெறும் கைக்கிளை, பெருந்திணை பற்றி விளக்குக.

(இ) மடலேறுதல் பற்றி விளக்கி, அதுதொடர்பான இலக்கியமரபு பக்தி இலக்கியங்களில் மாற்றம்பெற்றவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**5.** (அ) காவியம் என்ற இலக்கிய வடிவத்தின் இயல்பினை விளக்குக.

(ஆ) சங்கமருவிய காலத்தில் எழுந்த காவியங்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(இ) அவற்றிலிருந்து சோழர்காலத்தில் எழுந்த காவியங்கள் வேறுபடுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

**6.** ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் ஈழத்தில் எழுந்த,

(அ) வைத்திய சோதிட நூல்கள்

(ஆ) கண்ணகி தொடர்பான நூல்கள்

(இ) வரலாறுசார் நூல்கள்

(ஈ) விரத மகிமை கூறும் புராணங்கள்

(உ) பிரபுக்கள் புகழ்பாடும் பிரபந்தங்கள்

ஆகியவற்றுள் எவையேனும் **மூன்று** குறித்து விபரிக்குக. (15 புள்ளிகள்)

**7.** இருபதாம் நூற்றாண்டில், இலங்கை சுதந்திரம் அடையும் வரையான காலப்பகுதியில்

(அ) கவிதை

(ஆ) நாவல்

(இ) சிறுகதை

ஆகிய துறைகளின் வளர்ச்சிப் போக்கினை விபரிக்குக. (15 புள்ளிகள்)

**8.** (அ) (i) புணர்ச்சியின்போது யகர, வகர உடம்படுமெய்கள் தோன்றுவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(ii) 'நட' என்பதன் பிறவினை, காரணவினை வடிவங்களைக் குறிப்பிடுக.

(iii) ஓடினான் என்ற வினைமுற்றுக்குப் பொருத்தமான தனிவினையடை, கூட்டு வினையடை என்பவற்றை தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

(iv) 'தான்' என்பது படர்க்கைத் தற்சுட்டுப் பெயராகவும் அழுத்தப்பொருள் தரும் இடைச் சொல்லாகவும் வரும் வகையில் தனிதனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

(v) பின்வருவனவற்றுள் வழுவுள்ள வாக்கியம் யாது? அதனை வழுவுள்ளது என்று கொள்வதன் காரணம் யாது?

(1) சேனாதிபதி, படைவீரர்கள் முதலானவர்களோடு அரசனும் போருக்குச் சென்றனர்.

(2) படைவீரர்களோடு சேனாதிபதியும் அரசனும் போருக்குச் சென்றனர்.

(3) அரசன் தன் படைவீரர், சேனாதிபதி ஆகியோரோடு போருக்குச் சென்றான்.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி, சிறுகுறிப்பு வரைக.

(i) வினா வாக்கிய வகைகள்

(ii) சொற்றொடர் வகைகள்

(iii) வினைச்சொல்லின் இயல்புகள்

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

LOL Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

**Including Exercise Books, CR Books, and B5 Books**




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 WWW.LOL.LK

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!